மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மணவாளக்குறிச்சியில் ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலுள்ள துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வந்தாலும், மின் அழுத்தம் குறைவாக இருக்கின்றது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதை ஆய்வு செய்து, மின் அழுத்தம் குறைவாக இருக்கிறது என்றால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அதைப் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

103—

பொறியியல் கல்லூரி

***7088—திரு. எஸ்.எஸ். சரவணன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை தெற்குத் தொகுதியில் புதிய பொறியியல் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மாவட்டம், மதுரை தெற்குத் தொகுதியில் பொறியியல் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

2017 ஜூன் 29]

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பெருமைவாய்ந்த மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியில் (சிரிப்பு) 'பெருமைவாய்ந்தது' என்றால், "பெருமைவாய்ந்த" என்றுதான் சொல்ல முடியும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா, கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது. பெரியவர், தஞ்சை திரு. மன்னை நாராயணசாமி அவர்களின் சீரிய முயற்சியினால் கொண்டுவரப்பட்ட அந்தக் கலைக் கல்லூரியில் பல முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. அங்கு தேவையான அளவிற்கு* classrooms *இல்லை. அதேபோன்று அங்கு* library *இல்லை. சென்ற முறை அங்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்து, நூலகம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கித் தருவதாகக் கூறியிருந்தேன். ஒரே வாரத்தில்,* M.P. *நிதி அதற்கு வழங்கப்படவுள்ளதாகக் கூறி, அந்த நிதியைப் புறக்கணித்தார்கள். ஆனால், இன்றளவும் அந்த நிதி ஒதுக்கப்படவில்லை; அங்கே ஒரு நூலகம் கட்டப்படவில்லை. தேவையான* classrooms *இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, மன்னை, இராஜகோபாலசுவாமி அரசு கலைக் கல்லூரிக்குத் தேவையான கட்டடங்களையும், குறிப்பாக நூலகத்தையும் நிச்சயமாக இந்த அரசு அமைத்துத் தர வேண்டும். இல்லையென்றால், எனது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை அளிக்கிறேன். அதையாவது உபயோகப்படுத்தி நிச்சயமாக அந்த நூலகத்தை அங்கே கட்டித்தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில கருத்துகளைக் கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்கள். கடந்த 5 ஆண்டுக் கால ஆட்சியில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எந்தெந்தக் கல்லூரிகளிலே புதிதாகக் கட்டடங்கள் தேவையோ, புதிதாக* library *கட்டடங்கள் தேவையோ, அதற்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, தேவைகளைப் பூர்த்தி செய்திருக்கிறார்கள்.*

மேலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து ஆட்சி செய்கின்ற இந்தக் காலகட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடி பழனிசாமி அவர்களால், விதி 110–ன்கீழ் 710 கோடி ரூபாய் அளவிற்குப் புதிதாக திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. முதற்கட்டமாக, 105 கோடி ரூபாய் செலவில் இதுபோன்று தேவையான இடங்களில் கட்டடங்களைக் கட்டுவதற்காக அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தப் பகுதியில், ஆய்வுசெய்து, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ அல்லது மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடி பழனிசாமி அவர்கள் அறிவித்த 105 கோடி ரூபாயிலிருந்தோ, அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கும், மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலும், மாண்புமிகு அம்மாவின் அரசானது தொடர்ந்து செயல்படும் என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக்காட்டுகிறேன்.

முற்பகல் 10–20

ஏழையெளிய மாணவர்கள் படிக்க வேண்டுமென்பதற்காக, மாணவர்களின் தேவைக்கேற்ப, எந்தப் பகுதியாக இருந்தாலும், தேவைப்படும் பாடப் பிரிவுகளைத் தொடங்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த ஆறு ஆண்டுக் காலத்தில் 961 புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்கினார்கள். அதனடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் மேலும் 268 புதிய பாடப் பிரிவுகளை அறிவித்திருக்கின்றார்கள். அதையும் தொடங்கி, ஏழையெளிய மாணாக்கர்கள் என்னென்ன பாடப் பிரிவினைப் படிக்க விரும்புகிறார்களோ, அதைத் தொடங்குவதற்கு, அம்மாவின் அரசானது தொடர்ந்து செயல்படுகிறது என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக்காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும், மறையாமல் மக்களின் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1977 ஆம் ஆண்டிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை தமிழகத்தில் அமைத்தார்கள். ஈரோடு

2017 ஜூன் 29]

மாவட்டம், பெருந்துறை தொகுதி, இதுவரை 11 தேர்தல்களைச் சந்தித்திருக்கிறது. அதில் பத்து முறை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வெற்றியைத் தேடி தந்த தொகுதி, பெருந்துறை தொகுதி என்கிற பெருமை அதற்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சிறப்புவாய்ந்த தேர்தல் அறிக்கையினை அம்மா அவர்கள் வெளியிட்ட தொகுதியும், பெருந்துறை தொகுதியாகும். அப்படிப்பட்ட பெருந்துறை தொகுதியிலிருக்கின்றது ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம். திருப்பூர் மாவட்டத்தின் அருகில் இருக்கின்ற ஒரு தொகுதி இது. இந்தத் தொகுதியில் இருக்கிற ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், அருகில் இருக்கும் திருப்பூர் மாவட்டத்திற்குச் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்து வருகின்றது. எனவே, மாணவ, மாணவியர்களின் நலன்களைக் கருதியும், பெருந்துறை தொகுதியின் அருமை, பெருமைகளைக் கருதியும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பெருந்துறை தொகுதியில் ஓர் அரசு கலைக் கல்லூரியை அமைத்துத் தருவாரா என தங்கள்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவின் அரசைப் பொறுத்தவரையில், எந்தப் பகுதியிலே மாணவ, மாணவியர்களின் சேர்க்கை அதிகமாக இருக்கின்றதோ, அந்த இடங்களில் புதிய கல்லூரிகளைத் தொடங்கிட வேண்டும்; அந்த மாணாக்கர்கள் எந்த இடையூறும் இல்லாமல் உயர் கல்வி பெற வேண்டுமென்பதுதான் அம்மா அவர்களது அரசின் நோக்கம். அதன் அடிப்படையில்தான், கடந்த 6 ஆண்டுக் காலத்தில் 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், 24 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளையும் மற்றும் 16 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளையும், 4 பொறியியல் கல்லூரிகள் என ஆக மொத்தம் 65 கல்லூரிகளைத் துவக்கி வைத்தார்கள். அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த பெருந்துறை தொகுதிக்கு அருகில் இருக்கக்கூடிய அவினாசி தொகுதியிலேயும், கடந்த ஆண்டு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்கி வைத்தார்கள். ஆகவே, வரக்கூடிய*

காலக்கட்டங்களில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தப் பகுதியில், மாணவர்களின் சேர்க்கை சதவிகிதம் கூடுதலாக இருப்பின், மாண்புமிகு அம்மாவின் அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.*

திரு. அ. ராமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும், மறையாமலும் இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியை செவ்வனே நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். குன்னூர் தொகுதி 2,50,000 மக்கள் வசித்து வருகின்ற ஒரு தொகுதியாகும். அதில் குன்னூரில் மட்டும் மகளிர் கலைக் கல்லூரி இருக்கின்றது. கோத்தகிரி பகுதியிலிருந்து ஊட்டிக்குச் செல்வதாக இருந்தால் 30 கிலோ மீட்டர்; குன்னூருக்குச் செல்வதாக இருந்தால் 25 கிலோ மீட்டர்; மேட்டுப்பாளையம் செல்வதாக இருந்தால் 35 கிலோ மீட்டர் பயணிக்க வேண்டியுள்ளது. ஆகவே, கோத்தகிரி பகுதியில் அரசு கலைக் கல்லூரியோ அல்லது பொறியியல் கல்லூரியோ அமைத்து தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உயர் கல்வியிலே தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாகக் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்தோடு, திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தியிருக்கிறார்கள். கடந்த காலங்களில் உயர் கல்வியில் மாணவர்களின் சேர்க்கை சதவிகிதம் இந்திய அளவில் 24.4 என்றிருந்தது. இந்த நிலையில் தமிழகம் முதன்மை இடத்தினைப் பெறுகின்ற வகையில், உயர் கல்வியில் மாணவர்களின் சேர்க்கை விகிதம் தமிழகத்தில் 44.3 சதவிகிதம் என்ற அளவிற்கு உயருகின்ற வகையில், மாணவர்களின் உயர் கல்விக்காகப் பல்வேறு நலத் திட்டங்களைச் செய்து*

கொடுத்திருக்கின்றார்கள். தற்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்லூரி வேண்டுமென்று கேட்கின்றார். அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாணாக்கர்களின் சேர்க்கை சதவிகிதத்தை ஒப்பிடுகையில், அந்தப் பகுதியில் கல்லூரிகள் போதுமான அளவில் இருக்கின்றன. மேலும், மாணவர்கள் மலைப் பகுதியிலிருந்து கீழே இறங்கி வந்து படிக்கக்கூடிய வகையில், அந்தப் பகுதியில் கூடுதலாக ஒரு கல்லூரி கடந்த 6 ஆண்டுக் காலத்தில் தொடங்கப்பட்டிருக்கிறது. மேலும், வருகின்ற காலங்களில் அந்தப் பகுதியில் உயர் கல்வி பெறுகின்றவர்களின் சதவிகிதம் கூடுதலாக இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதைக் கூறி அமருகின்றேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது ஒட்டன்சத்திரம் தொகுதியில் அரசுக் கல்லூரியோ அல்லது அரசு உதவிபெறும் கல்லூரியோ இல்லாத காரணத்தால், பழனிக்கு அல்லது திண்டுக்கல்லுக்குச் சென்று மாணவர்கள் படிக்கின்ற சூழ்நிலை உள்ளது. பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலுக்குச் சொந்தமான ஆண்கள், பெண்கள் கல்லூரிகள் இரண்டு இயங்குகின்றன. ஏனென்றால், இந்த ஆண்டு மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளிலே அதிகம் சேராமல், கலைக் கல்லூரிகளிலே சேர விரும்புகிறார்கள். எனவே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே பதிலுரையிலே, இந்த ஆண்டு ஒவ்வொரு பிரிவிலும் 20 சதவிகிதம் கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு அனுமதி அளித்திருக்கிறோம் என்று சொன்னார்கள். இருந்தபோதிலும், எங்களுக்கு இருக்கின்ற சிரமம் என் தொகுதியிலே கல்லூரி இல்லை; பழனிக்குத்தான் செல்ல வேண்டும். ஏனென்றால், பழனி, ஒட்டன்சத்திரம், வேடசந்தூர், மடத்துக்குளம், உடுமலைப்பேட்டை, தாராபுரம் பகுதியிலுள்ள மாணவர்கள் எல்லோரும் பழனியில் உள்ள கல்லூரிக்கே வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, மாணவர்களுடைய நலன் கருதி, அந்த பழனி ஆண்டவர் கல்லூரியிலே ஆண்கள், பெண்கள் கூடுதலாகச் சேரும் வகையில், வகுப்புகளைத் தொடங்கி, பிற்படுத்தப்பட்ட, மிகவும்

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் படிப்பதற்கு ஏதுவாக இந்த ஆண்டு புதிய வகுப்புகள் தொடங்குவதற்கும், இன்னும் கூடுதலாக அங்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு, வருகின்ற காலங்களில், தமிழ்நாட்டில் ஒவ்வொரு தொகுதியிலும் எங்கெங்கு அரசு கலைக் கல்லூரிகள், அரசு உதவிபெறும் கலைக் கல்லூரிகள் இல்லை என்பதைக் கண்டறிந்து, அந்தப் பகுதிகளிலே கல்லூரிகளைத் தொடங்குவதற்கு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கக்கூடிய திண்டுக்கல் மாவட்டத்திலே அரசுக் கல்லூரிகள் இரண்டும், அரசு உதவிபெறும் கல்லூரிகள் மூன்றும், மேலும், 16 சுயநிதிக் கல்லூரிகளும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இருந்தாலும், மாணவர்களுடைய சேர்க்கை அதிகமாக இருக்கின்றது என்ற காரணத்திற்காக, கடந்த ஆண்டே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசுக் கல்லூரியிலே 20 சதவிகித மாணவர்கள் சேர்க்கை கூடுதலாகவும், சுயநிதிக் கல்லூரிகளில் 10 சதவிகித மாணவர்களின் சேர்க்கை கூடுதலாகவும், அதேபோல, அரசு உதவிபெறும் கல்லூரிகளிலே 15 சதவிகிதம் மாணவர்களைக் கூடுதலாகவும் சேர்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடும், ஆங்காங்கே இருக்கின்ற கல்லூரிகளிலே, காலத்திற்கேற்றவாறு புதிய பாடப் பிரிவுகள் வேண்டுமென்ற நோக்கத்தோடும், புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்கியிருக்கிறார்கள். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற, பழனி கல்லூரியிலே 20 சதவிகித மாணவர்களுக்கும் மேலாக, கூடுதலாக விண்ணப்பிக்கின்றபட்சத்திலே, அங்கு வகுப்பறைகளில் போதுமான இடம் இருக்கிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். Arts குரூப்பிலே கூடுதல் மாணவர்களைச் சேர்க்கலாம். ஆனால், Science படிக்கின்ற, அதாவது Physics, Chemistry படிக்கின்ற மாணவர்களுக்கு Lab வசதி கூடுதலாக இல்லை. ஆகவே, அந்த 20

2017 ஜூன் 29]

சதவிகித மாணவர்களுக்கு மட்டும்தான் அது சரியாக இருக்கிறது. எனவே, அதை ஆய்வு செய்து, பழனி கல்லூரியிலே கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்கான வாய்ப்பிருப்பின், அதை அரசு பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கையை எடுக்கும். இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான் தொடர்ந்து ஆட்சிசெய்து கொண்டிருக்கிறது. எதிர்காலங்களில் இதுபோன்ற தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலேதான்—நான் முன்பே சுட்டிக்காட்டியதைப்போல, மேலும் 268 புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்குவதற்குண்டான வாய்ப்பை, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடி பழனிசாமி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதையும் இன்றைக்கு முறையாகப் பயன்படுத்தி, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மாணவர்களுடைய தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

104—

முந்திரித் தொழிற்சாலை

***1234—திரு. பா. ஆறுமுகம்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை தொகுதியில் முந்திரித் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) முந்திரி உடைக்கும் வசதிகொண்ட புதிய தொழில்நுட்பத்துடன்கூடிய தொழிற்சாலையை அமைக்கும் திட்டம் அரசின் வசம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.